ஸ்ரீ

சர்வம்விஷ்ணுமயம்ஜகத்.

சென்னை

திருவல்லிக்கேணியி லெழுந்தருளியிராநின்ற

ஸ்ரீபார்த்தசாரதி பெருமாள்பேரில்

# பஞ்சரத்தினங்கீர்த்தனம்

# பதிகமுந்

## தெளிசிங்கபெருமாள்பேரில் பதிகம்.

ஆகிய இவைகள்

ஸ்ரீ – உ – வே – சார் – எ

ஸ்ரீமான் - கோயிற்கந்தாடையண்ணல்

இராமாநுஜாச்சாரியர்

திருவடிசம்பந்தரான

ஸ்ரீஆதிமூலராமாநுஜதாசரவர்கள்

மாணுக்கரிலொருவனுகிய

திருமயிலை – ஸ்ரீராகவதாசனியற்றியது.

திருவெவ்வுண்மாநகர்

ஆசூரி – வேங்கடாசாரியர்

திருவடிசம்பந்தரான

பு – திருவேங்கடதாசரவர்கள்

அநுமதிபெற்று

வே – பெருமாளிராமாநுஜதாசர்

க – பார்த்தசாரதிதாசர்

கா – ஏகாம்பரம்

இவர்கள் முயற்சியால்

சென்னை

ஸ்ரீநிகேதனஅச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

பிரஜோத்பத்திஞு தைமீ.

ஸ்ரீ



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதிபெருமாள்பேரில்

# பஞ்சரத்தினம்.

## நம்மாழ்வார் விஷியம் நேரிசைவெண்பா.

சீர்மேவுஞ்சென்னைத் திருவல்லிக்கேணியெனுந்
தார்மேவு ஸ்ரீபார்த்த சாரதிமேல் - பேர்மேவும்
பஞ்சரத்னப்பாமாலைபாடுதர்க்கு நம்மாழ்வார்
செஞ்சரணங் காப்பாக செப்பு.

## பன்னிருசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்ட வைகுந்த மாம்பதவி யீய்ந்திடுஞ் செகரட்க்ஷகா வெனவுமித் - திரிபுவனமதிலுள்ள யாவருந் தொழுதேத்துஞ் சிறு பைய சரணங்களில், வார்கொண்ட தண்டையழ கும்மிடையி லாடையும் வரன்வந்த நாபியழகும் - மாதுலட் சுமியுறையு மார்பிற் கவுத்துவமும் மலையொத்த தோளினழகுங், கூர்கொண்ட பஞ்சா யுதக்கர மும்முகங் குவலையர்கள் போற்றவடியன் - குறையோடி விட்டாடி வுனைபாடி துயர்ஜாடி கூத்தாடி யாநந்தமாய், தேர்கொண்ட வேலைசூழ் படியளந் திடுநாதா சீர்திருவலிக்கேணிவாழ் - தேஜோமயாநந்தா சிந்தாகுலந்தீரும் ஸ்ரீபார்த்தசாரதியே. (க)

ஆழிசூழுலகினிற் பிறந்தழியு மடியநின் னடிமை யெனவே சொல்லியும்-ஆவலொடு சென்னிமேற் கைகுவித் தநுதினமு மாயி

ரந் தரமுன்பதம், வாழிவா ழியெனவும் வாழ்த்தியும் நின்மன மஃ திரங் காததென்னே - மங்குனிரா விண்ணுமண் ணறியவே வைகு ந்த மன்பர்க் களித்ததேவே, கோழியர்க் கோன்றனுக் கிகபர மிர ண்டிலுள கோலமெலாங் காட்டி யாண்டோய் - கோக்களை மேய் த்துவிளை யாடிகளை மூடவளை குடங்களை யிரக்கி யுண்டோய், சீழு திர வுடலதால் சுமந்த தீவினையறச் சீர்திரு வலிக்கேணிவாழ் - தே ஜோ மயாநந்தா சிந்தாகுலந்தீரும் ஸ்ரீபார்த்த சாரதியே. (௨)

சீதாரவிந்த வயனமரரொடு முநிவருந் தினமுமேத் திடுமடி தனை - சிந்தையொடு வந்தனைச் செய்புமடி யர்க்குவருந் தீதறுத் துனதுதிவ்ய, பாதார விந்தமவர் மனம்புத்தி சித்தஞா பகத்திலு மமைத்த பொருளே - பாண்டவர் களுக்காக நால்வகைச் சேனை யொடு பாரதப்போர்நடாத்த, கேதாரமாடிடவு மரவுயர்த் தவன் முன்னே கிருபையொடு தூதுசென்றேய்- கீரீடிதுதி புரியுநிதியே கதி யெனக்கருளி கிலேசமற செயவிதுதகி, தீதார கற்றுமென சேதனு தியர்கள்கூற் சீர்திரு வலிக்கேணிவாழ் - தேஜோமயாநந் தா சிந்தா குலந்தீரும் ஸ்ரீபார்த்த சாரதியே. (௩)

முன்னளிற் கௌதம நதியினின் மூழ்கிய முநிவன் சிலை வில கிட-முந்தாணி யைக்கிழித் தேயவர்க் கீய்ந்தவண் முழுமன தறிந்த தின்பின், அன்னளில் துரியன் சுபத்தினித் துரோபதையை யமை ச்சர்சூழ் சபைமுன்னதாய் - அழைத்துவந் தவளின்பொன் னுடை யைக் களையவே அபையமென வங்குநின்ற, மன்னர்மற் றவர்களை நோக்கியென காருமென மறுமொழி சொலாதிருக்க - மாதுநின் னபையமென் றேதிகன் மாரியைமுன் மலைதூக்கி தடுத்தோயே என் சென்மவினையோவறிபேன் றுகிலீயெனத்தந்த சீர்திருவலிக் கேணிவாழ் - தேஜோ மயாநந்தா சிந்தா குலந்தீரும் ஸ்ரீபார்த்த சாரதியே. (௪)

ஆலிலையின் மீதிலொரு பாலகனு மாய்வளரு மாலிமாமுகில் வண்ணனே - அண்டமு மகண்டவுல கங்களையு முண்டசிறு வாதொ ண்டை கனிவாயனே, மாலினியி னுயிர்போக வவளினது முலையு ண்டும் மாபாவி கஞ்சன்விட்ட - வற்சரச் சூரனொரு கன்றதாய்வர

விருளின் மாயவுரு வாகிவென்றோய், பாலரிரு வர்ச்சதம் மருதமர
மாய்நிகழ பாலனஞ் செயவுதைத்தப் - பாதனே நீதனே போத
னே விநோதனே பரமப்ர க்யாதீதனே, சீலாவென ஸ்ரீராகவதாச
னேத்திடுஞ் சீர்திரு வலிக்கேணிவாழ் - தேஜோ மயாநந்தா சிந்தா
குலந்தீரும் ஸ்ரீபார்த்த சாரதியே. (ரு)

முற்றிற்று.

---

ஸ்ரீ



திருவல்லிக்கேணி

ஸ்ரீபார்த்தசாரதிபெருமாள்பேரில் கீர்த்தநம்.

## உடையவர் விஷயம்.

ஆசிரியவிருத்தம்.

புகலுநான் மறைக டோரும் பொலிந்தவெம் மரங்க நாதன்
தகைமிகு வகங்களிக்கத் தக்கதாய்ச் செய்ய வேண்டி
மகிதலத் தோர்தம் பாவ மதையொழித் திடவே வந்த
ஜெககுரு பூதூ ரன்பொற் சேவடி பணிகு வாமே.

## ஸ்ரீபார்த்தசாரதிபெருமாள்பேரில் கீர்த்தநம்.

(கீர்த்தனை - இராகம் - நாட்டை - ஆதிதாளம்.)

பல்லவி.

ஸ்ரீபெரம்பூதூர்வாசா - எனையாளெத்ராஜ
ஸ்ரீபெரம்பூதூர்வாசா

அநுபல்லவி.

ஆபத்சகாயமாயா வச்சுதனென்னும்நேயா
தீபன்மேற்பாடத்துய திருவருட்செய்சகாயா

சரணங்கள்.

ஆசூரி கேசவாச் சாரியர் - தமதருந்துணை காந்திமதி
அம்மையிவர்களபுத்திரர்
மாசொன்றில்லாதவரர் வானவர்கட்கும்பர
மாக விளங்க வுற்ற மாலின்மந்த்ரத்தைபெற்ற
மாசூரி களுந்தொழுந் தேசிகப் பதமுன் விழும்
மாசுகொண்டயான்புகழு மீசனேவளமைசெழும்
(ஸ்ரீபெரும்பூதூர்வாசா)

சதுர்வேத பாற் கடலை - தமதறிவெனுமதிதமத்
ததனுற்கடைந்துமடலை
பதமா யளித்த ஸ்ரீமத் பராங்குசர்க்குபின்தத்
பாரினில்வந்துதித்த பதுமவதநமுற்ற
பாஷியக்காரனே பராக்ரமவீரனே
காஷாயதர்ரியனே காசினிபோர்க்காரியனே
(ஸ்ரீபெரும்பூதூர்வாசா)

சஞ்சலக்கடலி லாழ்ந்து - பரதவித்துத்துரையறியா
தடனுழன்றேன் ருழ்ந்து
தஞ்சினே னிதைப்பொருத்து சுகுணமுறத்திருத்து
துயோர்புகழும்நசை சூழ்பார்த்தசாரதிமிசை
சூடிலன்பாமாலை துணையருளுமிக்காலை
சொல்லிராகவனநுகூல சுபிஷிலக்ஷணசீல
(ஸ்ரீபெரும்பூதூர்வாசா)

---

## ஸ்ரீபார்த்தசாரதி பெருமாள் பேரில்

### அறுசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நீர்மலி கடற்சூழ்ந்த நீணிலவளமையென்னுஞ்
சீர்மலி நகராந்திவ்யத் திருவல்லிக்கேணியில்வாழ்
ஏர்மலி ருக்மணீச மேதராய்விளங்குந் துய்ய
கார்மலி வண்ணன் செம்பொற் கழல்சரணண்டிவந்தேன்

(கீர்த்தனை - இராகம் - மோகனம் - தாளம் - ரூபகம்.)

பல்லவி.

வந்தேனின்சரணங்கதியே - ஸ்ரீபார்த்தசாரதி
மாயாவிநோத நிதியே

அநுபல்லவி.

சந்ததமுன்புகழ் தன்னைப்பன்னினேனே
அந்தரசேத்துந்திரு வல்லிக்கேணியானே

சரணங்கள்.

அரவுயர்த்தோன் முன்னைவர்க்காக அன்றுநாடிய நிர்வாக
துரகநால்வகைசேனையுமாக தூதுநடந்த பாதாயோக
(வந்தேனின்சரண)

துரோபதைத் துகிலுரியும்போதுத் துக்கித்தவ ளுனையேயோதுந்
துரோலங்கட்கேட்டத்தீதுந் துலைத்தவனே யானிப்போது
(வந்தேனின்சரண)

சீழுதிரமதசங்ய தநுதோல் சிந்திக்கிலநித்யமதால்
தாழும் ஸ்ரீராகவ தாசன்பால் தயைசெய்தருள நின்பால்
(வந்தேனின்சரணங்)

---

### அறுசீர்க் கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஆரண னமரர் மற்று மகிலமுள் ளவர்க் கொண்டாட
பூரணக் கிருபை பூண்ட புருஷோத்தம னென்னு ஸ்ரீமன்
நாரண னுன சௌரி நாயகா பல்லு யிர்க்குங்
காரண வஸ்து வேநின் கடைக்கண்ணுற் கருணை செய்யே.

# ஸ்ரீபார்த்தசாரதிபெருமாள்பேரில் கீர்த்தனம்.

(கீர்த்தனை இராகம் - தோடி - ரூபகம் - தாளம்.)

பல்லவி.

கருணைசெய் தருள் - கடைத்தேரிநீடிடவுனது
கடைக்கண்பார்த்தருள்.

அநுபல்லவி.

தருணமீதென்றுனை யடுத்தேன்
தாதா நீதர் ருக்மணி நாதா

சரணங்கள்.

அழுக்காரவாநான்குபின்னும் ஆசபாசத்தாலேங்குங்
கெழுவுதனீக்கிக் கேடில்லாதத்திரு
கேவலத்தையருளக் கேசவாத்திரு
(கருணைசெய்தருள்)

ஊழ்வினையோ முன்வினையோ - விதியோனெழுதுந்தீவினையோ
ஆழ்கடற்றுயின்ற வையாவறிகிலென்
ஆயினுமப்பிழைப் பொறுத்தருளிநின்
(கருணைசெய்தருள்)

கோரிநின்பதந்துதித்து - பணி - கோதையின்றுயரறுத்து
பாரோர்ப்புகழவே பக்ஷமுடன்றுயில்
பகர்ந்தஸ்ரீராகவா பாலன்றனக்கயில்
(கருணைசெய்தருள்)

---

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஆதியே யமலா துத்த வாழ்கடன் மேற்று யின்ற
தீதிலா தேவ தேவா தீதனே ஐவர்க்காக
தூதுபோய் மீண்டு சண்டை தொடுக்ககீதைப்புகன்ற
நாதனே இகப ரத்து நற்சுகந் தருகு வாயே.

(கீர்த்தனை - இராகம் - காம்போதி - ஆதிதாளம்.)

பல்லவி.

இகபரசுகந்தருவாய் - பார்த்தசாரதியே
இகபரசுகந்தருவாய்

### அநுபல்லவி.

ஜெகம்புகழ்த்திருமணாளா தகைமிகுத்தகுணாளா
ககனர்த்துதிக்குந்தாளா திகிநிகர்த்தத்தோளா

### சரணங்கள்.

குழரசவினிமையுன் விழுமத்திருநாமமோதுங்
கிழமைபாகவதர்த்தங் கழடொழாதயென்மீதும்
அழுங்கவேண்டுமையா வழங்கியத்தாளாற்றீதுங்
கெழுவுதலும்நீக்கிசை செழுமதீதாயெப்போதும்
(இகபரசுக்ந்தருவாய்)

ஆயிரங்கண்ணனுக்கு மயன்றனக்கும்மெத்தத்
தூயவர்களுக்கும் நேயதாசர்க்குமுற்ற
மாயவனேயென்ற மாயோள்துயர்த்தவிர்த்த
மாயவாநினையடுத்த சேயனையாண்டுநித்தம்
(இகபரசுகந்தருவாய்)

சரணகஞ்சமலனை சரணமென்றேயடுத்தேன்
பிரணவப்பொருளேநின் கருணைநாமந்தொடுத்தேன்
சரமைகணவன்வந்தித் திருமாலேயுனையடுத்தேன்
கிருபைசெய்யெனசெய்த ஸ்ரீராகவாநினைத்துதித்தேன்
(இகபரசுகந்தருவாய்)

---

### அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வாரணமிசைத்துயின்ற மாதவாயென்பாவம்நீ
வாரணஞ்செய்விநோதா வாசுதேவன்றன்பாலா
பூரணகிருபைபூண்டு புவனமூன்றையுங்கார்க்கும்
நாரணாவெனக்கருட்செய் நளினஸ்ரீபதிமாயோனே.

(கீர்த்தனை இராகம் - பந்துவராளி - ரூபகதாளம்)

### பல்லவி.

ஸ்ரீயப்பதியாய்த் திருவல்லிக்கேணிவாழ் - ஸ்ரீபார்த்த சாரதிமாயா.

அநுபல்லவி.

தூயபங்கேருக மாதுசமேதா
தீயனைகார்த்தருள் தீனப்ரபோதா

ச்ரணங்கள்.

அருமாதவர்த் துதிகெம்பீரா
அநந்தசயனு யெனையாட்சீரா
சரணபக்தியைத் தந்திடவாராய்
தசரதன்மைந்த னெனுரகுவீரா
(ஸ்ரீயப்பதியாய்த்)

தபோதனன் சசிபதிக்கிட்ட
சாபத்தைதீர்த்தோய் நினைபணிந்திட்ட
விபூஷிணாழ்வா னுனையடுத்திட்ட
விதமறிந்தும மையாஸ்த்தந்தந்திட்ட
(ஸ்ரீயப்பதியாய்த்)

புவியோர்க்கடைத் தேரிநீடவே
புவியில்வந்தாயன் பர்க்கொண்டாடவே
தவிக்குமனையிலைநீ ரர்யலைந்தாடவே
ததியிரங்கும்ஸ்ரீ ராகவன்பாடவே
(ஸ்ரீயப்பதியாய்த்)

---

மங்களம்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மங்கள குணங்களுள வன்பர்க ளிதம்போற்று
மாற்பரந் தாமனுக்குந்
துங்கமுறும் பீதாம் பரத் துகிலணிந்திடுஞ்
சுபிஷிலட் க்ஷணன்றனக்கும்
பிங்கலத் துழாய்மௌலி யஸ்த்த பஞ்சாயுதப்
பெருமானு மாயவர்க்குந்
திங்கடவ ழும்வளமை திருவல்லிக் கேணியான்
சேவடிக்கு மங்களம்.

கீர்த்தனை - இராகம் - சௌராஷ்டிகம் - ஆதிதாளம்.

பல்லவி.

திருவல்லிக் கேணியான்றஞ் சேவடிக்குமங்களம்.

அநுபல்லவி.

திருருக்குமணியெனுந்தாய் திவ்யமணாளனெனுந்

சரணங்கள்.

பண்ணவர்பணியுங்கமலக் கண்ணன்பக்தவற்சலத்
(திருவல்லிக்)
தேவதேவாதிதேவ ஜீவகுணாநுபாவ
(திருவல்லிக்)
ஸ்ரீராகவதாசனென்னுஞ் சிறியன்றுதிப்ரசன்ன
(திருவல்லிக்)

---

வாழி விருத்தம்.

மாதவன் மலர்பதம் வாழி திருமாதுடைய
மாண்மலராச் சரணம்வாழி
மாதவ ரெதிந்த்ரரும் வாழியாழ் வார்களும்
மாமுநி யோர்கள்வாழி
பூதலத் துங்கவரும் வாழி பாகவதர்பற்
புருஷோத் தமர்கள்வாழி
நாதன் ஸ்ரீபார்த்தசா ரதிவாழி கேட்பவர்
நவில்வோரும் வாழியென்றே.

கீர்த்தனங்கள் முற்றிற்று.

ஸ்ரீபார்த்தசாரதிபெருமாள்பேரில்

# பதிகம்.

அந்தரவிபுதோர்போற்ற ஐவர்க்குதூதுசென்ற ...... ............*
சுந்தரதிருவடிக்குத் தொண்டனுமுரிமையோடு ..................*
வந்தனன்சரணநம்பி வாசுதேவன்றன்பாலா ...... ..............*
சிந்தனைதீர்த்தாட்கொள்ளுந் திருவல்லிக்கேணியானே.............(௧)

ஆதியுமந்தமாகி யடிநடுமுடிவுமாகி ..............................*
சோதியாயருவுமாகித் துலங்கியவெம்பிரானே ..................*
நீதிசேரர்ச்சுனர்க்கு நீடுசாரத்யஞ்செய்தோய் ......... ........*
தீதரவெனையாட்கொள்ளுந் திருவல்லிக்கேணியானே.............(௨)

இகபரவாழ்வைவேண்டி யெழிற்பதந்தனை துதித்தேன் .........*
ககனவாகனனே துத்தக் கடன்மிசைத்துயின்றமர்யா ............*
அகமகிழ்ந்தடியர்தம்மை யாட்கொளுங்கருணையென்னுஞ் ......*
சிகரமேயெனையாட்கொள்ளுந் திருவல்லிக்கேணியானே.......(௩)

ஈவுளோனிறைவனீயென் றியாவரும்புகழபாலன் ...............*
தாவியேநின்னடியிர் சரணமென்றடைந்தேனையா...............*
கோவிந்தாமுகுந்தாநந்தா க்ஷமகட்சத்யபாமாந் .........  .........*
தேவியின்பதியேயாட்கொள் திருவல்லிக்கேணியானே. .........(௪)

உற்றவருறவோர்மற்று முரியபந்துக்கள்சுற்ற........... ........*
பெற்றவரெந்தனோடுப் பிறந்தவரின்னமுள்ள ....................*
சுற்றத்தாராசையெல்லாஞ் சுடுகாடுமட்டுந்தானே ...............*
சிற்றறிவோனையாட்கொள் திருவல்லிக்கேணியானே. .............(௫)

ஊழ்வினைபயன்தாற்பல் லுருமாறிப்பிறந்தவேழைக்.............*
சோழைமும்மலமகற்றிக் கொள்ளுதர்க்காகநித்தம்......... ......*
ஆழ்கடன்மேற்றுயின்ற வச்சுதாநினை துதித்தேன் ................*
சீழ்தசையுடற்போமுன்னுள் திருவல்லிக்கேணியானே. ........(௬)

எள்ளினுள்ளெண்ணெய்யைப்போ லெங்கனுநிறைந்தோனீயே ..*
விள்ளுதற்கரியமோன வேதவேதியர்கள்போற்றும் ..........*
வள்ளல்சதுர்வேதங்கள் வடியிட்டதேனேபாகே ..............*
தெள்ளுமாணிக்கமேயாள் திருவல்லிக்கேணியானே. ............(எ)

ஏலிந்ததுயரம்வைத்தா யிரவிகோடிப்ரகாசா..................*
நானுனக்கென்னசெய்தே னையகாமேகவண்ண ..................*
மேனியாயாவரும்ப்ர மிக்கசாரதியாய்நின்ற ....................*
தீனரக்ஷகனேயாட்கொள் திருவல்லிக்கேணியானே. ............(அ)

ஐயனே அகண்டாகண்ட ஆதியேஅரியேஞானத் ................*
துய்யனேஅநந்தரூபா துளவணிவாமாநாமா....................*
வையகமளக்குநாதா வைகுந்தாஅடியர்சேவை ...................*
செய்திடவெனையாட்கொள்ளுந் திருவல்லிக்கேணியானே......(௯)

ஒருமுதற்றனியாய்நின்ற ஓம்பிரணவனேமுன்னாள்...............*
துரௌபதைக்காடையிய்ந்த சுகுணமாவுஜிதாஇந்த ..............*
தரணியோர்விபுதரோடுத் தநயனும்போற்றுகின்ற ..............*
திருமகட்பதியேயாட்கொள் திருவல்லிக்கேணியானே. .........(௰)

நேசனேவானோர்போற்றும் நின்மலபக்தர்நெஞ்ச...............*
வாசனேநறுந்துழாய்மா மௌலியேநின்னைபோற்றும் ..........*
தாசர்க்குதாசனான தநயன்ராகவனின்நெஞ்சத் ..................*
தீசனேமகத்வமித்த திருவல்லிகேணியானே...................(௰௧)

முற்றிற்று.

ஸ்ரீபார்த்தசாரதிபெருமாள் திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

சென்னை திருவல்லிக்கேணியி லெழுந்தருளியிராநின்ற

## தெளிசிங்கபெருமாள்பேரில் பதிகம்.

ஸ்ரீபராங்குசாழ்வார் வணக்கம்.

நேரிசைவெண்பா.

சீரார்பரவுந் திருதெளிசிங் கப்பெருமான் ......*
பேரால் பதிகமொன்றுப் பேசிடவே - ஏரார்...*
தலைவன் குருகயர்கோன் றம்புதல்வ னுகவந்தப் *
புலவன் மலரடி காப்பு. ........................*

எழுசீர்க்கழில்நெடி லாசிரிய விருத்தம்.

அண்டமுமுலகுமதிலுளவெவையு மணியணியாகவேயமைத்து, முண்டகவேதனுமுன்றிருநாபியின் முளைத்தவ னென்னநான்மறையும், அண்டருமுநிவோ ரரயிரங்கண்ண னுனவர்க்கரியவோயெனையாள், தெண்டிரைகடல்சூழ் திருவல்லிக்கேணி தெளிசிங்கவதநமாதவனே. (௧)

ஆதியில்ஜனகாதிகள்பலமுநிவோ ரக்ற்றிடப்பெரும்பதந்தந்தோய், மேதினியேழோடேழையுமளந்து விட்டாட்கதியெனக்கருதி, ஓதிடாதெந்தனுளமதிலுகந்தவொருபரம்பொருளெனுமையா, தீததையகற்றுந் திருவல்லிக்கேணி தெளிசிங்கவதநமாதவனே. (௨)

இகல்செய்திமெவ் வ்றுவனைநீக்கியென்னையாட் கொள்பவாநீயோ, அகிலத்தினிலுள வெவ்வுயிர்க்குயிரா யடங்கியுமடங்காதவனுஞ், சகலமுந்தானேநீயென்றோதுந் தந்திக்காய் முதலையைகொய்ய, திகிரிவிட்டொறுத்தோய் திருவல்லிக்கேணி தெளிசிங்கவதநமாதவனே. (௩)

ஈகைபெண்மண்ணெனுமியம்புமூவாசையை யெந்தனுலிலைவினையொழிக்க,போகிதன்குற்றமனத்தையும்போக்கிப்புகழுறவருடணையீய்ந்தோய், சாகரமேற்கண்வளர்ந்தமாதவனே சாரசமலர்ந்திடுந்திவ்ய, சேகர்தாட்சேர் திருவல்லிக்கேணி தெளிசிங்கவதநமாதவனே. (௪)

உன்பதக்கமலத்தாலகலிகைதன் னுயிர்தனைபெற்றிருந்திட்யான், அன்புடனேத்தி யகமெனுமிருளை யகற்றிட நினைந்துமே யிப்போ, ஒன்பதுதுளையோ டிருக்குமிச்சடல மொழியுமுன் னெனக்கருட்புரிவாய், சின்மயதேவே திருவல்லிக்கேணி தெளிசிங்க வதநமாதவனே. (௬)

ஊன்சீழுதிர வுடலோடெடுத்து முயிர்க்கடைத்தேற்று தெனையாள், மான்மனாசரணத் தினில்சரண்புகுந்த மங்கைலீலாவதிவைந்தன், நான்முகன்றன்னே டுலகினைபடைத்த நாரணகதியெனக் கார்த்த, தேன்றுளவநஞ்சூழ்த் திருவல்லிக்கேணி தெளிசிங்கவதநமாதவனே. (௭)

எண்பத்துநான்கிலட் க்ஷம்மெனயாவ ரியம்பியத் தொகையிலொன்றான, பண்புறுமடியே னின்னடியேத்திப் பணிந்திடாதிருந்திதையறிந்து, சண்டனின்பாசத்தினில்சிக்கிடுமுன்சற்குருவாகிவந்திட்ட, திண்கரத்தோனேதிருவல்லிக்கேணிதெளிசிங்கவதநமாதவனே.

ஏரார்துதிசெய் திடவருந்தாளா இரவிகோடி ப்ரகாசனேநீ, பாராய்க்கடைக்கண் ணூழ்வினைதீரப்பன்னகமீதினி லுரங்கும், ஓராயிரம்பெய ரோனெனவுனைக்கி லுன்பெயர்க் கலகுதா னுண்டோ, சீராயெனையாள் திருவல்லிக்கேணி தெளிசிங்கவதநமாதவனே. (அ)

ஐவகைபூதமாகியவிவைகளறிவதையகற்றுந்துரோகிகள்தான், மைவிழியார்தங்கருக்குழிருழன்று வருந்தொழிலனத்தையுமறந்து, பையரவின்மேற்றுயில்பவனேயுன் பதம்பெறநினையாதெனையாள், செய்யவட்கணவா திருவல்லிக்கேணிதெளிசிங்கவதநமாதவனே. (௯)

ஒருநான்முகனால் வரமதைபெற்ற வுக்ரகுணமுள வரக்கன், சருவமேதினியி லுந்தன்பெயர்விளங்கத்தக்கதாய்ச்செய்தனதையடக்க, பிரகலாதனனு லரியெனச்சொல்லப் பிளந்திட்டாய் யிரணியன் மார்பை, திருக்கதையொழித்தாள் திருவல்லிக்கேணி தெளிசிங்கவதநமாதவனே. (௰)

முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# புத்தக அறிக்கை.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னைக் கருக்கத்தம்மை கோவிலுக்கடுத்த ஜெகநாதபுரத்தில் ஸ்தாபித்திருக்குந் திருப்பாணாழ்வார் சபைத்தலைவர் வே - பெருமாளிராமாநுஜ தாசரிடத்திலும், ஷ சபை காரியதரிசி - க - பார்த்தசாரதி தாசரிடத்திலும், ஷ சபையாரிலொருவரும் திருமயிலை காட்டுக்கோவில் கென்னடி வீதியில் (௪-வது) கதவிலக்கமுள்ள கிரகத்தில் வசிக்கும் நா-வாளையமவர்கள் குமாரனும் இந்நூலியற்றிய ஸ்ரீராக்வதாசனிடத்திலும், சென்னை இராயப்பேட்டையைச்சார்ந்த ஆல்தோட்டத்தில் வசிக்கும் கா - ஏகாம்பரமவர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.